# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

எண் 19–A, ருக்மினி லட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை – 8.
தொலைபேசி: 044-28411376 இணையதளம்: http://www.tnerc.gov.in


## 2014–15–ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய்த் தேவையை நிர்ணயம் செய்ததன் சுருக்கம்

**முன்னுரை :**

1. கடந்த ஆண்டு, தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம், 2010–11 ஆம் ஆண்டிற்கு இறுதி உண்மை நிலையைக் கண்டறிதல் மற்றும் மொத்த வருவாய்த் தேவைக்கான ஒப்பளிப்பு, 2011–12 ஆம் ஆண்டிற்கு தற்காலிக உண்மை நிலையைக் கண்டறிதல் மற்றும் மொத்த வருவாய்த் தேவைக்கான ஒப்புதலளிப்பு, 2012–13 ஆம் நிதி ஆண்டிற்கு மதிப்பீட்டின் அடிப்படையிலான செயற்பாட்டின் ஆய்வு மற்றும் 2013–14 முதல் 2015–16 வரையிலான ஆண்டுகளுக்கு மதிப்பீடுகளின் அடிப்படையில் பல்லாண்டுக்கான மின்கட்டன மனுவினை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் தாக்கல் செய்தது. அதன் அடிப்படையில் அந்த மனு மீது, மாநில ஆலோசனைக்குழு, பொது மக்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்களின் கருத்துக்களை பரிசீலனை செய்தபின் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இரண்டாவது கட்டுப்பாட்டுக் காலத்திற்கான ஆண்டு வருவாய்த் தேவை மற்றும் மின் அனுப்புகைக் கட்டணத்தை நிர்ணயம் செய்து ஆணையிட்டது.

2. 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 64 ஆம் பிரிவின்படி, மாநில ஒழுங்குமுறை ஆணையத்திடம், ஆணையம் வகுத்த விதிகளின்படி மின்கட்டண வீதத்தினை நிர்ணயம் செய்யக் கோரும் மனுவினை தாக்கல் செய்ய வேண்டியது மின் உரிமதாரரின் கடமையாகும். 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் (மின்கட்டண வீதம் நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதி 5–இன் படி மின் உரிமம்தாரர் தமது கட்டணத்தை நிர்ணயம் செய்யக் கோரும் மனுவினை ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 30 ஆம் தேதி அன்றோ அல்லது அதற்கு முன்போ ஆணையத்திடம் தாக்கல் செய்ய வேண்டும், அதன் தொடர்புடைய எடுபகுதி கீழே தரப்பட்டுள்ளது.

*“(1) மின் பகிர்வு / மின் செலுத்தல் உரிமம்தாரர் ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாதம் 30 அன்றோ அல்லது அதற்கு முன்போ வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில், அப்போதுள்ள மின்*

*கட்டண வீதத்திலும், மதிப்பிடப்பட்ட செலவினங்களையும் வசூலிப்பதற்கு உரிமம்தாரர் அனுமதிக்கப்படுகிற எதிர்பார்க்கப்படும் மொத்த வருவாய் பற்றிய விவரங்கள் அடங்கிய மொத்த வருவாய்த் தேவை அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டும்.''*

அதன்படி, தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம், 2011–12 ஆம் ஆண்டின் இறுதி உண்மை நிலையைக் கண்டறிதல், மற்றும் மொத்த வருவாய்த் தேவைக்கான ஒப்பளிப்பு, 2012–13 ஆம் நிதியாண்டிற்கு தற்காலிக செயற்பாட்டின் ஆய்வு மற்றும் 2013–14 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டின் ஆய்வு மற்றும் 2014–15 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய் தேவை மற்றும் மின் அனுப்புகைக்கான கட்டணம் நிர்ணயம் செய்வதற்கான மனுவினை நவம்பர் மாதம் 30 ஆம் தேதி அன்றோ அல்லது அதற்கு முன்போ ஆணையத்திடம் தாக்கல் செய்திருக்க வேண்டும். எனினும், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் மேற்குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் மனுவினை தாக்கல் செய்யவில்லை.

3. மாண்பமை மின்சார மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் நவம்பர் 11, 2011–ஆம் நாளிட்ட அசல் மனு எண் 1–இன் ஆணையில், மாநில ஆணையங்களுக்கு கீழ்க்கண்டவாறு கட்டளையிட்டுள்ளது.

*''ஆண்டு வருவாய்த் தேவைக்கான மனு, உண்மை நிலையைக் கண்டறிதல் வருடாந்திர செயல்திறன் மதிப்பாய்வு ஆகியவற்றை தாக்கல் செய்யும் நிகழ்வில் தாமதமோ, திட்டமிடப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்கு மேல் மனுவினை தாக்கல் செய்யாவிட்டாலோ, மாநில ஆணையம் தானாக முற்பட்டு மின் கட்டண வீதத்தினை நிர்ணயம் செய்ய சட்டத்தின் 64–ஆம் பிரிவிற்கு ஏற்ப மற்றும் கட்டணக் கொள்கை விதி 8.1(7)–இன் படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.''*

4. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின்கட்டண வீதத்தினை நிர்ணயம் செய்யும் ஒழுங்குமுறை விதிகள், 2005–இல், ஒழுங்குமுறை விதி 6–இல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது

*''(8) உரிமம்தாரர் மின் கட்டண வீத மாறுதல் கேட்டு விண்ணப்பத்தினை உரிய காலத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை துவங்காதிருக்கிற நேர்வில், ஆணையமானது, தானே முற்பட்டு (suo-motu) மின் கட்டண வீதம் நிர்ணயம் செய்வதற்கான மற்றும் ஒழுங்குமுறை ஆய்வினை மேற்கொள்வதற்கான நடவடிக்கையினைத் துவக்க வேண்டும்''.*

மாண்பமை மின்சார மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் கட்டளைப்படி, தேசிய மின் கட்டணக் கொள்கை மற்றும் 2003–ஆம் ஆண்டின் மின்சார சட்டத்தின் பிரிவு 62 மற்றும் 64–இன் படி அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களின் படி மற்றும் மின் கட்டண வீதத்தினை நிர்ணயம் செய்வதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள் 2005–இன் படி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தானே முற்பட்டு (suo-motu) 2014–15– ஆம் நிதி ஆண்டிற்கு ஆண்டு வருவாய்த் தேவையை நிர்ணயம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது.

மேற்கண்ட சூழ்நிலையில், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தானே முற்பட்டு 2014–15–ஆம் நிதி ஆண்டிற்கு மின்கட்டண வீதத்தினை மற்றும் ஆண்டு வருவாய்த் தேவையினை, தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் ஆணையத்திற்கு சமர்ப்பித்த தகவல்களின் அடிப்படையில் முடிவு செய்துள்ளது. ஆணையத்திடம் உள்ள தகவல்களின் அடிப்படையில், ஆணையம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு முடிவு செய்துள்ளது.

அ. 2011–12 மற்றும் 2012–13 ஆம் ஆண்டின் செலவுகளை தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் அடிப்படையில் தற்காலிக உண்மை நிலை கண்டறிதல் மேற்கொள்ளப்படும்.

ஆ. 2013–14 ஆம் ஆண்டின் செயற்பாட்டு ஆய்வு மற்றும் 2014–15 நிதி ஆண்டின், ஆண்டு வருவாய் தேவையை, ஆணையத்திடம் உள்ள தகவல்களின் அடிப்படையில் மற்றும் நிதி ஆண்டு 2011–12 மற்றும் 2012–13–க்கு தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

5. ஆணையம், 2011–12, 2012–13 மற்றும் 2013–14 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட ஆண்டு வருவாய்த் தேவையை நிர்ணயித்துள்ளது. அதன் சுருக்கம் கீழ்க்கண்ட அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1 : 2011–12 முதல் 2013–14 வரையான ஆண்டிற்கான திருத்தப்பட்ட ஆண்டு வருவாய்த் தேவை**

**(ரூ.கோடியில்)**

| விவரங்கள் | 2011–12 | 2012–13 | 2013–14 |
|---|---|---|---|
| தேய்மானம் | 297.17 | 302.45 | 315.62 |
| கடன் மூலதனத்தின் மீதான வட்டி | 1121.90 | 1030.94 | 713.79 |
| சமவுரிமை பங்கிலிருந்து வருவாய் | 28.45 | 92.39 | 207.32 |
| பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புச் | 6.71 | 7.74 | 8.42 |

| | | | |
|---|---|---|---|
| செலவுகள் | | | |
| பணியாளர் செலவுகள் | 507.40 | 567.20 | 632.34 |
| நிர்வாக மற்றும் பொதுச் செலவுகள் | 7.18 | 15.07 | 15.68 |
| நடைமுறை மூலதனத்தின் மீதான வட்டி | 55.00 | 97.16 | 61.89 |
| பிற பற்றுகள் | 0.39 | 0.43 | 0.48 |
| ஊக்கத் தொகைகள் | 3.13 | 10.17 | 22.83 |
| காப்பீடு | – | – | 43.92 |
| நிகர முந்தைய கால செலவு | 1.56 | – | – |
| **மொத்த நிலையானச் செலவுகள்** | **2,028.81** | **2,123.56** | **2,022.30** |
| கழிக்க: குறுகிய கால திறந்த நுழைவுரிமை வாயிலாக பெறப்பட்ட வருமானம் | 27.88 | 28.47 | 68.53 |
| கழிக்க: பிற வருமானம் | 9.92 | 5.38 | 37.38 |
| **நிகர ஆண்டு வருவாய்த் தேவை** | **1,991.19** | **2,089.71** | **1,916.40** |

6. ஆணையத்திடம் உள்ள தகவல்களின் அடிப்படையில் ஆணையம், 2014–15 ஆம் நிதி ஆண்டிற்கான மொத்த வருவாய்த் தேவை ரூ. 2,467.13 கோடி என தற்காலிகமாக நிர்ணயம் செய்துள்ளது. மொத்த வருவாய்த் தேவையின் கூறுகள் கீழ்க்கண்ட அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2 : 2014–15 ஆம் நிதி ஆண்டிற்கான ஆண்டு வருவாய்த் தேவையின் கூறுகள்:-**

**(ரூ.கோடியில்)**

| **விவரங்கள்** | **ஜூன் 2013 ம் ஆண்டின் கட்டண ஆணையில் அனுமதிக்கப்பட்டவை** | **ஆணையத்தினால் தற்காலிகமாக நிர்ணயிக்கப்பட்டது** |
|---|---|---|
| தேய்மானம் | 435.17 | 537.66 |
| கடன் மூலதனத்தின் மீதான வட்டி | 1434.32 | 831.08 |
| சமவுரிமை பங்கிலிருந்து வருவாய் | 426.05 | 347.83 |
| பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புச் செலவுகள் | 8.76 | 8.91 |

| | | |
|---|---|---|
| பணியாளர் செலவுகள் | 668.49 | 709.29 |
| நிர்வாகம் மற்றும் பொதுச் செலவுகள் | 16.30 | 16.57 |
| நடைமுறை மூலதனத்தின் மீதான வட்டி | 103.63 | 83.33 |
| பிற பற்றுகள் | 0.52 | 0.52 |
| ஊக்கத் தொகைகள் | 46.92 | 38.30 |
| காப்பீடு | 79.01 | – |
| **மொத்த ஆண்டு வருவாய்த் தேவை** | **3219.18** | **2573.50** |
| கழிக்க: பிற வருமானம் மற்றும் குறுகியகால திறந்த நுழைவுரிமை மூலம் பெறப்பட்ட வருவாய் | 106.36 | 106.36 |
| **நிகர மொத்த வருவாய்த் தேவை** | **3112.82** | **2467.13** |

7. செலவு மற்றும் வருவாய்த் தேவை மறு நிர்ணயம் எவ்வாறு செய்யப்பட்டுள்ளது என்பது குறித்த சிறு விளக்கம் கீழ்வரும் பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ளது.

**இயக்கம் மற்றும் பராமரிப்புச் செலவுகள்**

**பணியாளர் செலவுகள்:–**

8. 2011–12 முதல் 2012–13 வரையான ஆண்டிற்கு, ஆணையம் ஜூன் 2013 ஆம் ஆண்டில் வெளியிட்ட மின்கட்டண ஆணையில் அனுமதித்த செலவினங்களையே எடுத்துக்கொண்டுள்ளது. ஆணையம் வரையறுத்த விதிமுறைகளுக்கேற்ப பணியாளர் செலவினங்களில் 2012–13 ஆம் ஆண்டின் அகவிலைப்படி தவிர ஏனைய செலவினங்கள் 4 விழுக்காடு உயர்த்தப்பட்டு 2013–14 ஆம் ஆண்டிற்கான பணியாளர் செலவினங்களை நிர்ணயம் செய்துள்ளது. 2014–15 ஆம் ஆண்டிற்கு ஏப்ரல் 2014–ல் ஆணையத்தினால் திருத்தியமைக்கப்பட்ட விதிமுறைகளுக்கேற்ப பணியாளர் செலவினங்களை நிர்ணயம் செய்ய, 5.72 விழுக்காடு உயர்த்தப்பட்டுள்ளது.

9. தமிழக அரசினால் முறையாக அவ்வப்போது அறிவிக்கப்படும் அகவிலைப்படி விகிதங்களின் அடிப்படையில் அகவிலைப்படி வீதம் அந்தந்த ஆண்டுகளுக்கு கணக்கிடப்பட்டுள்ளது. மற்றும் 2014–15–ஆம் நிதி ஆண்டிற்கு, 2011–ஆம் நிதி ஆண்டு முதல் 2014 ஆம் நிதி ஆண்டு

வரையான காலத்திற்கு கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தின் (CAGR) அடிப்படையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

**பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புச் செலவுகள்:–**

10. 2011–12 முதல் 2013–14 வரையான ஆண்டிற்கு, ஆணையம் ஜுன் 2013–ஆம் ஆண்டில் வெளியிட்ட மின்கட்டண வீத ஆணையில் அனுமதித்த செலவினங்களையே எடுத்துக்கொண்டுள்ளது. 2014–15 ஆம் ஆண்டிற்கு, ஏப்ரல் 2014–ல் ஆணையத்தினால் திருத்தியமைக்கப்பட்ட விதிமுறைகளுக்கேற்ப பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புச் செலவுகளை கணக்கிட 5.72 விழுக்காடு உயர்த்தப்பட்டுள்ளது.

**நிர்வாகம் மற்றும் பொதுச்செலவுகள்:–**

11. 2011–12 முதல் 2013–14 வரையான ஆண்டிற்கு, ஆணையம் ஜுன் 2013 ஆம் ஆண்டில் வெளியிட்ட மின்கட்டண வீத ஆணையில் அனுமதித்த செலவினங்களையே எடுத்துக் கொண்டுள்ளது. 2014–15–ஆம் ஆண்டிற்கு, ஏப்ரல் 2014–இல் ஆணையத்தினால் திருத்தியமைக்கப்பட்ட விதிமுறைகளுக்கேற்ப, நிர்வாகம் மற்றும் பொதுச் செலவுகளை கணக்கிட 5.72 விழுக்காடு உயர்த்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 3: ஆணையத்தினால் நிர்ணயிக்கப்பட்ட இயக்கம் மற்றும் பராமரிப்புச் செலவுகள்** **(ரூ.கோடியில்)**

| விவரங்கள் | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 |
|---|---|---|---|---|
| பணியாளர் செலவுகள் | 507.40 | 567.20 | 632.34 | 709.29 |
| பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புச் செலவுகள் | 6.71 | 7.74 | 8.42 | 8.91 |
| நிர்வாகம் மற்றும் பொதுச் செலவுகள் | 7.18 | 15.07 | 15.68 | 16.57 |
| மொத்தம் | 521.29 | 590.01 | 656.44 | 734.77 |

**மூலதன செலவு மற்றும் மூலதனமாக்கல்கள்:–**

12. 2010–11 முதல் 2012–13 வரையான ஆண்டிற்கு, ஆணையம், தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் அடிப்படையில் உண்மையான செலவுகளை எடுத்துக்கொண்டது. 2013–14 மற்றும் 2014–15 ஆம் ஆண்டிற்கு, ஆணையம் தமிழ்நாடு மின்தொடரமைப்புக் கழகம் வழங்கிய திருத்தப்பட்ட மூலதனசெலவு மற்றும் திருத்தப்பட்ட மூலதனமாக்கல் எடுத்துக்கொண்டுள்ளது.

ஆணையத்தினால் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட மூலதனசெலவு மற்றும் மூலதனமாக்கல் கீழ்கண்ட அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை: 4 – ஆணையத்தினால் எடுத்துக்கொள்ளப்பட்ட மூலதன செலவு மற்றும் மூலதனமாக்கல்கள்**

**(ரூ. கோடியில்)**

| அளவுரு | நிதி ஆண்டு 2011–12 | நிதி ஆண்டு 2012–13 | நிதி ஆண்டு 2013–14 | நிதி ஆண்டு 2014–15 |
|---|---|---|---|---|
| மூலதனசெலவு | 1044.60 | 1412.17 | 3783.34 | 2907.43 |
| மூலதனமாக்கல்கள் | 173.53 | 433.50 | 302.67 | 4525.45 |

**தேய்மானம்:–**

13. 2011–12– ஆம் நிதி ஆண்டு முதல் 2013–14–ஆம் நிதி ஆண்டு வரை, ஆணையம் ஜூன் 2013 ஆம் ஆண்டில் வெளியிட்ட மின்கட்டண வீத ஆணையில் அனுமதித்த செலவினங்களையே எடுத்துக்கொண்டுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின்கட்டண ஒழுங்குமுறை விதிகளின்படி, தேய்மானத்திற்கான விகிதங்களை மாற்றியமைத்துள்ளது. ஆணையம், 2014–15 ஆம் நிதி ஆண்டிற்கு, திருத்தப்பட்ட தேய்மான விகிதங்களை எடுத்துக்கொண்டுள்ளது.

**அட்டவணை: 5 – 2011–12 முதல் 2014–15 வரையான ஆண்டிற்கு ஆணையத்தினால் நிர்ணயிக்கப்பட்ட தேய்மானம்**

**(ரூ. கோடியில்)**

| **சொத்துக்களின் பெயர்** | **2011–12** | **2012–13** | **2013–14** | **2014–15** |
|---|---|---|---|---|
| நிலம் மற்றும் நில உரிமைகள் | – | – | – | – |
| கட்டிடங்கள் | 5.66 | 5.88 | 6.42 | 12.83 |
| நீரமுத்த பணிகள் | 0.06 | 0.06 | 0.06 | 0.12 |
| பிற கட்டிட பணிகள் | 2.00 | 2.05 | 2.16 | 4.35 |
| இயந்திர தொகுதியும் இயந்திர நிலையமும் | 143.01 | 145.53 | 151.83 | 235.27 |
| மின்வடம், மின்தொடர், மின்சுற்று இன்னும் பல | 137.24 | 139.72 | 145.91 | 277.13 |
| வாகனங்கள் | 4.53 | 4.54 | 4.56 | 2.42 |

| | | | | |
|---|---|---|---|---|
| அறைகலன் மற்றும் பொருத்திகள் | 1.03 | 1.03 | 1.03 | 1.31 |
| அலுவலக சாதனம் | 3.64 | 3.64 | 3.64 | 4.24 |
| மொத்தம் | 297.17 | 302.45 | 315.62 | 537.66 |

**நீண்டகால கடன்கள் மீதான வட்டி மற்றும் பிற நிதிசார்ந்த கட்டணங்கள்:–**

14. 2011–12 ஆம் ஆண்டிற்கு, ஆணையம் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் அடிப்படையில் உள்ளபடியேயான கடன் தொகைகளை எடுத்துக் கொண்டு மற்றும் திரும்பச் செலுத்தப்பட்ட கடன்களைக் கருத்தில் கொண்டு வட்டியை அனுமதித்துள்ளது. 2012–13 முதல் 2013–14 வரையான வருடங்களுக்கு, ஆணையம் அட்டவணை–4 இன்படி திருத்தியமைக்கப்பட்ட மூலதன செலவு மற்றும் மூலதனமாக்கல்களை கருத்தில் எடுத்துக் கொண்டு, கடன்களின் சுயவிவரத்தை கணக்கில் எடுத்துக் கொண்டு ஆணையம் 2012–13 முதல் 2014–15 வரையான ஆண்டிற்கு, சராசரியாக 12 விழுக்காடு வட்டி விகிதம் என எடுத்துக்கொண்டு கடன்களின் மீதான வட்டியை கணக்கிட்டுள்ளது.

**அட்டவணை 6:– ஆணையத்தினால் நிர்ணயம் செய்யப்பட்ட நீண்டகால கடன் மூலதனத்தின் மீதான வட்டி**

**(ரூ. கோடியில்)**

| விவரங்கள் | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 |
|---|---|---|---|---|
| நீண்டகால கடன் மூலதனத்தின் மீதான வட்டி | 1,360.23 | 1,297.18 | 1,322.29 | 1,552.73 |
| பிற வட்டி மற்றும் கட்டணங்கள் | 2.62 | 5.46 | 5.39 | 5.25 |
| மொத்த வட்டி மற்றும் நிதி சார்ந்த கட்டணங்கள் | 1,362.85 | 1,302.64 | 1,327.68 | 1,557.98 |
| மூலதனமாக்கப்பட்ட வட்டி மற்றும் நிதி சார்ந்த கட்டணங்கள் | 240.95 | 271.69 | 613.89 | 726.90 |
| நிகர வட்டி மற்றும் நிதி சார்ந்த கட்டணங்கள் | 1,121.90 | 1,030.94 | 713.79 | 831.08 |

**சமவுரிமை பங்கிலிருந்து வருவாய்:–**

15. ஆணையம், தன்னுடைய முந்தைய மின்கட்டண வீத ஆணையில் சமவுரிமைப் பங்கிலிருந்து வருவாயை கணக்கிட, அனுமதித்த 14 விழுக்காட்டினை இந்த ஆணையிலும் எடுத்துக் கொண்டு மூலதனத்தில் 30 விழுக்காட்டின் மேல் வருவாய் கணக்கிட்டுள்ளது. ஆணையம்,

அட்டவணை 4–இல் உள்ள திருத்தப்பட்ட மூலதன செலவினை சமவுரிமை பங்கிலிருந்து பெறப்படும் வருவாயை மதிப்பிட எடுத்துக்கொண்டுள்ளது.

**அட்டவணை : 7 – ஆணையத்தினால் நிர்ணயம் செய்யப்பட்ட சமவுரிமைப் பங்கிலிருந்து வருவாய்**

**(ரூ. கோடியில்)**

| விவரங்கள் | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 |
|---|---|---|---|---|
| தொடக்கத்திலுள்ள சமவுரிமை பங்கு | 0.00 | 406.46 | 913.37 | 2048.38 |
| இந்த ஆண்டின் கூடுதல் தொகை | 406.46 | 506.91 | 1135.00 | 872.23 |
| மொத்த சமவுரிமை பங்கு | 406.46 | 913.37 | 2048.38 | 2920.60 |
| சராசரி சமவுரிமை பங்கு | 203.23 | 659.92 | 1480.87 | 2484.49 |
| சமவுரிமை பங்கிலிருந்து வருவாய் | 28.45 | 92.39 | 207.32 | 347.83 |

**நடைமுறை மூலதனத்தின் மீதான வட்டி:–**

**16.** ஆணையம் தனது ஒழுங்குமுறை விதிகளில் குறித்துரைக்கப்பட்ட வரைமுறைகளின் அடிப்படையில் நடைமுறை மூலதனத்தை மதிப்பீடு செய்துள்ளது. நடைமுறை மூலதனத்தில் உள்ள உதிரிபாகங்களின் பராமரிப்பு கணக்கிடுவதற்கு, ஆணையம் மறு மதிப்பீடு இல்லாத மொத்த நிலையான சொத்துக்களை கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளது. ஆணையம், தனது முந்தைய ஆணையில் அனுமதித்த வட்டி விகிதத்தையே, வட்டிக்கான செலவுகளை நிர்ணயம் செய்ய எடுத்துக் கொண்டுள்ளது.

**அட்டவணை : 8 – ஆணையம் நிர்ணயம் செய்த நடைமுறை மூலதனத்தின் மீதான வட்டி**

**(ரூ. கோடியில்)**

| விவரங்கள் | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 |
|---|---|---|---|---|
| நிகர நடைமுறை மூலதனத்தின் தேவை | 423.11 | 658.72 | 428.33 | 576.67 |
| நடைமுறை மூலதனத்தின் மீதான வட்டி | 55.00 | 97.16 | 61.89 | 83.33 |

**பிற பற்றுகள்:–**

17. ஆணையம், தனது முந்தைய ஆணையில் அனுமதித்த பிற பற்றுக்களையே தற்போதும் எடுத்துக் கொண்டுள்ளது.

**ஊக்கத்தொகை:–**

18. ஆணையம், தனது முந்தைய ஜூன் 20, 2013–இல் வெளியிட்ட ஆணையில் அனுமதியளித்த கிடைக்கக்கூடிய மின்செலுத்துதல் அளவினையே தற்போதும் கணக்கிடுவதற்கு எடுத்துக்கொண்டுள்ளது. ஆணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட திருத்தப்பட்ட சமவுரிமைப் பங்கினையே ஊக்கத்தொகை நிர்ணயம் செய்ய எடுத்துக்கொண்டுள்ளது.

**காப்பீடு:–**

19. 2013–14 ஆம் ஆண்டிற்கு, ஆணையம் காப்பீட்டினை திருத்தி மதிப்பிட மறு மதிப்பீடு இல்லாத மூலதன செலவினை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்குமுறை விதிகளில் வழங்கப்பட்டுள்ள 0.5 விழுக்காட்டினை விதிமுறைகளுக்கேற்ப எடுத்துக்கொண்டுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின்படி தற்போது காப்பீடு வழங்குதல் 2014–15 ஆம் ஆண்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. எனவே ஆணையம், 2014–15 ஆம் ஆண்டிற்கு காப்பீட்டினை அனுமதிக்கவில்லை.

**அட்டவணை : 9 – ஆணையத்தினால் நிர்ணயம் செய்யப்பட்ட பிறபற்றுகள், காப்பீடு மற்றும் ஊக்கத்தொகை**

**(ரூ. கோடியில்)**

| விவரங்கள் | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 |
|---|---|---|---|---|
| பிற பற்றுகள் | 0.39 | 0.43 | 0.48 | 0.52 |
| ஊக்கத்தொகை | 3.13 | 10.17 | 22.83 | 38.30 |
| காப்பீடு | – | – | 43.92 | – |

**பிற வருவாய்:–**

20. ஆணையத்திடம் உள்ள தகவல்களின் அடிப்படையில், ஆணையம் பிற வருவாயினை தனது முந்தைய ஆணையில் உள்ளவற்றையே நிகர வருவாய்த் தேவையை கணக்கிட எடுத்துக் கொண்டுள்ளது.

**ஒதுக்கப்பட்ட மின்செலுத்துதல் திறன்:–**

21. தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் வழங்கிய புள்ளி விவரங்களில், புதிய மின் உற்பத்தி நிலையங்களின் வணிக ரீதியான இயக்கத்தை கணக்கில் கொண்டு, ஒதுக்கப்பட்ட மின் செலுத்துதல் திறனை ஆணையம் நிர்ணயம் செய்துள்ளது. இந்த ஒதுக்கப்பட்ட மின் செலுத்துதல் திறனையே மின் செலுத்துதல் கட்டணத்தை நிர்ணயம் செய்ய உபயோகித்துள்ளது.

**அட்டவணை :10 –ஆணையத்தினால் நிர்ணயம் செய்யப்பட்ட ஒதுக்கப்பட்ட மின் செலுத்துதல்திறன்**

**(மெகாவாட்)**

| **ஆதாரங்கள்** | **2014–15** |
|---|---|
| **தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்** | |
| காற்றாலை (Non REC) | 2,406 |
| உயிர்க்கூளம் (Non REC) | 13 |
| இணை உற்பத்தி சலுகையுடன் (Non REC) | 637 |
| பிற ஆதாரங்கள் | 14,628 |
| **மொத்தம்** | **17,683** |
| **நீண்ட கால திறந்த நுழைவுரிமை** | |
| காற்றாலை (Non REC) | 4,171 |
| உயிர்க்கூளம் (Non REC) | 0 |
| இணை உற்பத்திச் சலுகையுடன் (Non REC) | 0 |
| பிற ஆதாரங்கள் | 704 |
| **மொத்தம்** | **4,875** |
| **மொத்தம்** | |

| | |
|---|---|
| காற்றாலை (Non REC) | 6,576 |
| உயிர்க்கூளம் (Non REC) | 13 |
| இணை உற்பத்தி சலுகையுடன் (Non REC) | 637 |
| பிற ஆதாரங்கள் | 15,332 |
| **ஆகமொத்தம்** | **22,558** |

**மின் அனுப்புகை மூலம் வருவாய்:–**

22. 2011–12 ஆம் நிதி ஆண்டிற்கு ஆணையம் மின் அனுப்புகை மூலமான வருவாயினை தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் அடிப்படையில் தணிக்கை முடிவுற்ற பின் அடையப்பெற்ற வருவாயை அந்தந்த வருடங்களுக்கு எடுத்துக்கொண்டுள்ளது. 2012–13–ஆம் நிதி ஆண்டிற்கு, ஆணையம் தனது முந்தைய மின்கட்டண வீத ஆணையில் அனுமதித்த வருவாயான ரூ.3076 கோடியையே கணக்கில் எடுத்துக்கொண்டுள்ளது. ஆனால், 2013–14 ஆம் நிதி ஆண்டிற்கு ஆணையம், மின் அனுப்புகைக்கான மின் கட்டணத்தை தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் வழங்கிய ஒதுக்கப்பட்ட மின் செலுத்துதலுக்கான திறனை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது.

23. மின் அனுப்புகைக்கான கட்டணம் ஜூன் 20, 2013 வரையான காலத்திற்கு, 2012–ஆம் வருடம் வெளியிடப்பட்ட மின்கட்டண வீத ஆணையின்படி கணக்கிடப்பட்டுள்ளது. அதேசமயம், ஜூன் 20, 2013–க்கு பிறகு கணக்கிட ஆணையத்தின் முந்தைய ஆணையில் குறிப்பிடப்பட்ட கட்டணத்தினையே எடுத்துக் கொண்டுள்ளது.

**அட்டவணை–11 : ஆணையத்தினால் நிர்ணயம் செய்யப்பட்ட மின் அனுப்புகைக்கான கட்டணம்:**

**(ரூ. கோடியில்)**

| விவரங்கள் | 2011–12 | 2012–13 | 2013–14 |
|---|---|---|---|
| மின் அனுப்புகைக்கான கட்டணம் மூலம் வருவாய் | 1707.06 | 3075.99 | 1634.41 |

**நீண்டகால திறந்த நுழைவுரிமைக்கான மின் அனுப்புகைக்கான கட்டணம்.**

24. 2014–15–ஆம் நிதி ஆண்டிற்கு ஆணையத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆண்டு வருவாய்த் தேவை மற்றும் 2013–14–ஆம் நிதி ஆண்டு வரையான வருவாய் பற்றாக்குறையை கருத்தில்

கொண்டு **2014–15** ஆம் நிதி ஆண்டிற்கு தற்காலிக மின்கட்டண வீதத்தினை மதிப்பிட்டுள்ளது. கீழ்கண்ட அட்டவணையில் மாநிலத்திற்குள் மின்அனுப்புகைக்கான கட்டண வீதம் விரிவான கணக்கீட்டின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 12: 2014–15 –ஆம் நிதி ஆண்டிற்கான நீண்டகால திறந்த நுழைவுரிமைக்கான கட்டணங்கள்**

| **அளவுரு** | **சூத்திரம்** | **2014–15** |
|---|---|---|
| 2014–ஆம் நிதி ஆண்டு வரையான வருவாய் பற்றாக்குறை (ரூ. கோடி) | A | **(366.89)** |
| நிகர வருவாய்த் தேவை (ரூ.கோடி) | B | **2,467.13** |
| **மொத்த வருவாய்த் தேவை (ரூ.கோடி)** | **C=A+B** | **2,100.24** |
| **ஒதுக்கப்பட்ட மின் செலுத்துதல் திறன்** | | |
| காற்றாலை (Non REC) - MW | D | **6,576.00** |
| உயிர்க்கூளம் (Non REC) – MW | E | **13** |
| இணை உற்பத்திச் சலுகையுடன் (Non REC) - MW | F | **637** |
| பிற ஆதாரங்கள் - MW | G | **15,332** |
| நாட்கள் | H | **365** |
| மின்அனுப்புகைக்கான கட்டணம் ரூ./மெகாவாட்/நாள் | I=C x 10^7/ ((Dx40%+Ex50%+Fx60%+G)x H) | **3,135.58** |

**குறுகிய கால திறந்த நுழைவுரிமை கட்டணங்கள்**

**25.** அனுமதிக்கப்பட்ட நிகர வருவாய்த் தேவையின் அடிப்படையில் ஆணையம், **2014–15**–ஆம் நிதியாண்டிற்கு குறுகிய கால திறந்த நுழைவுரிமை கட்டணமாக ரூ. **130.65** / மெகாவாட் / மணி(Rs./MW/hr) என மதிப்பிடப்பட்டுள்ளது. இது **100** சதவிகிதம் அனுமதிக்கப்பட்ட நீண்டகால திறந்த நுழைவுரிமைக்கு பொருந்தக்கூடிய மின்அனுப்புகைக்கான கட்டணங்களை சார்ந்தது.

**அட்டவணை 13: ஆணையத்தினால் அனுமதிக்கப்பட்ட குறுகியகால திறந்த நுழைவுரிமைக்கான கட்டணங்கள்**

| விவரங்கள் | சூத்திரம் | 2014–15 |
|---|---|---|
| நீண்ட கால திறந்த நுழைவுரிமை கட்டணம் (ரூ./மெகாவாட்/நாள்) | A | 3,135.58 |
| மாநிலத்திற்குள் குறுகிய கால திறந்த நுழைவுரிமை பெற்ற மின் நுகர்வோர் செலுத்த வேண்டிய மின் அனுப்புகைக்கான கட்டணம் மற்றும் மாநிலங்களுக்கிடையேயான திறந்த நுழைவுரிமை பெற்ற மின் நுகர்வோர் மாநிலத்திற்குள் உள்ள கட்டமைப்பை உபயோகிக்கும் போது செலுத்த வேண்டிய மின் அனுப்புகைக்கான கட்டணம். (ரூ./மெகாவாட்/மணி) | B= (A * 100 % / 24) | 130.65 |

**மின் அனுப்புகை திட்டமிடல் மற்றும் மின் அமைப்பு முறை இயக்கக் கட்டணங்கள் (Scheduling and System Operation Charges) மற்றும் எதிர்வினை மின் கட்டணங்கள் (Reactive Energy Charges)**

**26. 2014–15**–ஆம் நிதி ஆண்டிற்கு மின் அமைப்பு முறை இயக்கக் கட்டணங்கள் (Scheduling and System Operation Charges) மற்றும் எதிர்வினை மின் கட்டணங்களுக்கு (Reactive Energy Charges) இருந்து வரும் நிலையே தொடரும் அதாவது, ரூ.**2000**/நாள் அல்லது நாளின் பகுதிக்கு மற்றும் **12.00** காசுகள்/kVArh மற்றும் வரும் ஆண்டுகளில் **0.5** காசுகள் / kV-Arh என ஒவ்வொரு ஆண்டும் உயர்த்தப்படும்.

**மின் செலுத்துதலில் ஏற்படும் மின் இழப்பு:–**

27. ஆணையம், தனது முந்தைய மின் கட்டண வீதத்தை நிர்ணயம் செய்த ஆணையில் அனுமதித்த மின்னழுத்தம் வாரியாக குறிப்பிடப்பட்ட மின் செலுத்தல் இழப்பினை எடுத்துக் கொண்டுள்ளது. அவ்விழப்பு கீழ்க்கண்ட அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது.

| **மின்னழுத்தம்** | **2011–12** | **2012–13** | **2013–14** | **2014–15** |
|---|---|---|---|---|
| 230 கிலோவோல்ட் | 0.76% | 0.80% | 0.80% | 0.80% |
| 110 கிலோவோல்ட் | 1.94% | 1.90% | 1.90% | 1.90% |
| 66 கிலோவோல்ட் | 0% | 0% | 0% | 0% |
| **மொத்தம்** | 2.70% | 2.70% | 2.70% | 2.70% |

**செயலாளர்**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி